वैश्वानरेष्टिः जातेष्टिर्वा **வைஶ்வாநரேஷ்டி**

जातेष्टि - தேவதை वैश्वानरன். திரவியம் பனிரெண்டு कपाल पुरोडाशம்.
அதைப் பிள்ளைக் குழந்தை பிறந்தால் செய்யவேண்டியது.
இதை விதித்து - எட்டு, ஒன்பது, பத்து, பதினொன்று कपालங்களில் செய்த पुरोडाशங்களை ஸ்தோத்திரம் பண்ணி, கடைசியில் இந்த இஷ்டியைச் செய்வதால், பிறந்த குழந்தை சுத்தனாயும், தேஜஸு, சாப்பாடு, இந்திரிய வலிமை, பசு ஸம்பத்து - இவைகள் உள்ளவனாயுமாவன் என்று வேதம் முடிக்கிறது.
(கா-2, பிர-2, அநு-5, ப-25,26) (तै.संहिता - काण्डः-2, प्रश्नः-2, अनु.5, पश्चा.25,26)

वै॒श्वा॒न॒रन्द्वाद॑शकपाल॒न्निर्व॑पेत्पु॒त्रे जा॒ते यद॒ष्टाक॑पालो॒ भव॑ति गाय॒त्रियै॒वैनं॑म्ब्रह्मवर्च॒सेनं॑ पुनाति॒ यन्नव॑कपालस्त्रि॒वृतै॒वास्मि॒न्तेजो॑ दधाति॒ यद्दश॑कपालो वि॒राजै॒वास्मि॑न्न॒न्नाद्य॑न्दधाति॒ यदेका॑दशकपालस्त्रि॒ष्टुभै॒वास्मि॑न्निन्द्रि॒यन्द॑धाति॒ यद्द्वाद॑शकपालो॒ जग॑त्यै॒वास्मि॑न्प॒शून्द॑धाति॒ यस्मि॑ञ्जा॒त ए॒तामिष्टि॑न्नि॒र्वप॑ति पू॒त ए॒व ते॑ज॒स्व्य॑न्ना॒द इ॑न्द्रि॒या॒वी प॑शु॒मान्भ॑वति ॥

இது ஒரே இஷ்டியென்றும், இதின் பலன் பிறந்த குழந்தைக்கு என்றும், அதை जातकर्मத்துக்கு பிறகும், தீட்டுப்போன பிறகும் செய்யவேண்டியதென்றும் தீர்மானம்.
(पू.मी. अध्याय-1, पाद-4, अधि-12; अध्या-4, पाद-3, अधि-17,18,19).

(पू.मी. अध्यायः-1, पादः-4, अधिकरणम् -12)

1.4.12.17 पूर्ववन्तोऽविधानार्थास्तत्सामर्थ्यं समाम्नाये ॥
1.4.12.18 गुणस्य तु विधानार्थे तद्गुणाः प्रयोगे स्युरनर्थका न हि तं प्रत्यर्थवत्ताऽस्ति ॥
1.4.12.19 तच्छेषो नोपपद्यते ॥
1.4.12.20 अविभागाद्विधानार्थे स्तुत्यर्थे नोपपद्येरन् ॥
1.4.12.21 कारणं स्यादिति चेत् ॥
1.4.12.22 आनर्थक्यादकारणं कर्तुर्हि कारणानि गुणार्थो (हि) विधीयते ॥

(पू.मी. अध्यायः-4, पादः-3, अधिकरणम्-17,18,19)

4.3.17.38 - फलसंयोगस्त्वचोदिते न स्यादशेषभूतत्वात् ॥
4.3.17,18 - अङ्गानां तूपघातसंयोगो निमित्तांर्थः ॥

कपालம் *(கபாலம்) என்பது மண்ணால் செய்து சுடப்பட்டு தட்டையாயும் சக்கிரம் போலவும் இருக்கும் சிறிய துண்டுகள்.*
ஆஹவநீயத்தில் மேல் புறத்தில் கபாலங்களை வைத்து, அவைகளின் மேலே உபவேஷம் என்கிற குச்சியாலே தணலை வைக்கவேண்டியது.



அக்கினி தேவதைக்குக் கொடுக்க வேண்டிய புரோடாசத்திற்கு எட்டு கபாலங்களும், அக்கினீஷோம தேவதைக்குக் கொடுக்க வேண்டிய புரோடாசத்துக்குப் பதினொரு கபாலங்களும் வேண்டியது

புரோடாசம்

நெல் முதலிய தான்யத்தைக் குத்தி, உமியை நீக்கி, பிறகு குருணையையும் நீக்கி, முழு அரிசியை அம்மியில் அறைத்து, மாவாக்கி, அந்த மாவை வறுத்த பிறகு, வெந்நீரை அந்த மாவில் விட்டு, மாவையும், நெய்யையும் சேர்த்து, பிசைந்து, ஆமை வடிவத்தில் உருண்டையாகச் செய்து, கபாலங்களில் (கபாலம் ஒரு ரூபாய் வடிவமுள்ள ஓடு) நெருப்பை வைத்து, அதன் மேல் இந்த மாவு உருண்டையை எடுத்து வைத்து, அதன் மேலும் தணலைப் போட்டு, சிறிது நேரம் காய்ச்சி, விதிவத்தாக மேலிலுள்ள சாம்பலை நீக்கி, மாவு உருண்டையை பித்தளை பாத்திரத்தில் ஹவிஸ் பாத்திரத்தில் நெய்யைத் தடவி வைக்க வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட மாவு உருண்டை தான் புரோடாசம் எனப்படுகிறது.

கபாலங்களை வைக்கிற விதம்

நடுவில் வைக்க வேண்டிய கபாலத்துக்கு கீழ்புறம் இரண்டாவது கபாலம்,
அதின் கீழ்புறம் மூன்றாவது,
நடுக்கபாலத்திற்குத் தென்புறம் நாலாவது,
வடபுறம் ஐந்தாவது,
மேல்புறம் ஆறாவது,
அக்கினி மூலையில் ஏழாவது,
ஈசான்னிய மூலையில் எட்டாவது.

இது எட்டு கபாலங்களை வைக்கும் விதம்.
அதிக கபாலங்கள் வைக்கவேண்டுமானால், அவைகளை எங்கேயாவது வைக்கலாம், ஆனால் புரோடாசமானது எல்லாவற்றின் பேரிலும் இருக்கும்படி செய்ய வேண்டியது.

ஒன்று முதல் ஏழு கபாலங்களை வைக்கும் விதம்



वै॒श्वा॒न॒रन्द्वाद॑शकपाल॒न्निर्व॑पेत्पु॒त्रे जा॒ते ⟵ மந்த்ரம்



यद्॒ष्टाक॑पालो॒ भव॑ति गायत्रि॒यैवैनं॑म्ब्रह्मवर्च्॒सेनं॑ पुनाति



यन्नव॑कपालस्त्रि॒वृतै॒वास्मि॒न्तेजो॑ दधाति



यद्दशंकपालो वि॒राजै॒वास्मिंन्न॒न्नाद्यंन्दधा<u>ति</u>



यदेका॑दशकपालस्त्रि॒ष्टुभै॒वास्मिं॑न्निन्द्रि॒यन्द॑धाति



यद्द्वाद॑शकपालो॒ जग॑त्यै॒वास्मि॑न्प॒शून्द॑धाति



यस्मि॑ञ्जा॒त ए॒तामिष्टिं॑ निर्वप॑ति पू॒त ए॒व
ते॑ज॒स्व्य॑न्ना॒द इ॑न्द्रिया॒वी प॑शु॒मान्भ॑वति



நெல்லைக் குத்தி அரிசியாகப் பண்ணி, அரிசியை அறைத்து மாவாகப் பண்ணி, மாவை வறுத்து, ஜலத்தை விட்டு உண்டையாகப் பண்ணி அதைச் சுடவேணும். அப்போது அதற்கு पुरोडाशம் (**புரோடாசம்**) என்று பெயர்.